பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

22 10 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் 78 சதவீத கிராமப்புற மக்கள் பாதுகாப்பான குடிநீர் பெற்று வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. நாடு முழுவதிலும் உள்ள எட்டு கோடி பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. நாமக்கல் மாவட்டத்தில் 298 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை இன்று திறந்து வைத்த முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின, புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.
4. தமிழக கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.
5. **Basel** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் ஆல்பனோ ஒலிவெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் கிராமப்புறங்களில் உள்ள 78 சதவீத மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய நீர்வள விருதுகளை வழங்கி பேசிய அவர், கடந்த 2019-ஆம் ஆண்டு ஊரகப்பகுதிகளில் 17 சதவீத மக்களுக்கு மட்டுமே குடிநீர் வசதி கிடைத்ததாக சுட்டிக்காட்டினார்.

ஜல்ஜீவன் இயக்கம் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மழை நீர் சேகரிப்பில் மாநிலங்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்று குறிப்பிட்ட அவர், நிலத்தடி நீர் நாளுக்கு நாள் குறைந்து வருவது குறித்தும் திருமதி திரௌபதி முர்மு கவலை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்பது பிரிவுகளில் 38 அமைப்புகளுக்கு குடியரசுத் தலைவர் தேசிய நீர்வள விருதுகளை அவர் வழங்கினார்.

சிறந்த மாநிலத்துக்கான விருது ஒடிஸாவுக்கும், இரண்டாவது விருது உத்தி.ரபிரதேசத்துக்கும், மூன்றாவது விருது குஜராத் மற்றும் புதுச்சேரிக்கும் வழங்கப்பட்டது.

நீர்வளத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய கிராம பஞ்சாயத்து, நகராட்சி, சங்கங்கள் மற்றும் மக்கள் அமைப்புகளுக்கும் தனித்தனியாக விருதுகள் வழங்கப்பட்டன.

**[]<<<>>>[]**

நாடு முழுவதிலும் உள்ள எட்டு கோடி பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான இரண்டாவது வெண்மை புரட்சியை மத்தி.ய அரசு முடுக்கிவிட்டுள்ளதாக உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அனந்த்நகரில் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் வைரவிழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு பேசிய திரு அமித்ஷா, தற்போது ஒரு கோடியே 50 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்திருப்பதாகக் கூறினார்.

பல பால் உற்பத்தியாளர்கள் தங்களுக்கு உரிய விலை கிடைக்காமல் சுரண்டலுக்கு ஆட்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பால் உற்பத்தி ஆண்டுக்கு ஆறு சதவீதம் உயர்ந்து வருவதாகக்கூறிய அவர், இது உலக சராசரியைவிட அதிகம் என்று சுட்டிக்காட்டினார்.

பால் உற்பத்தியை மேம்படுத்திடவும், பால் உற்பத்தியாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் சிறப்பாக கடமையாற்றி வருவதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான பிஜேபி அரசு, பால்வளத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகவும், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பால்வள கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் கூறினார்.

தேசிய கோகுல் இயக்கம் உள்ளிட்டவை நல்ல பலனை அளித்திருப்பதாகவும் திரு அமித்ஷா குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய பால்வள வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய திட்டங்களையும் திரு அமித்ஷா தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் மற்றும் குஜராத் மாநில அமைச்சர் திரு ராகவ் ஜி பட்டேல் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

தமிழக கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

போனஸ் சட்டத்தின் கீழ் அச்சகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் 20 சதவீத போனஸ் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உபரித்தொகை இல்லாமல் உள்ள சங்கங்களில் பணி புரிவோருக்கு பத்து சதவீத போனஸும், கருணைத் தொகையும் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத, நிகர லாபம் ஈட்டாத தலைமை சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களின் பணியாளர்களுக்கு மூவாயிரம் ரூபாய் கருணைத்தொகையும், லாபம் ஈட்டாத தொடக்க சங்கங்களில் பணி புரிவோருக்கு இரண்டாயிரத்து 500 ரூபாயும் கருணைத் தொகையாக வழங்கப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

அமுதம் மக்கள் அங்காடிகள் மூலம் 499 ரூபாய் விலையில் 15 மளிகைப் பொருட்கள் அடங்கிய அமுதம் பிளஸ் மளிகை தொகுப்பு விற்பனை திட்டத்தை மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை கோபாலபுரம் அமுதம் அங்காடியில் இந்த திட்டத்தினை அவர் தொடங்கி வைத்தார்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மஞ்சள் தூள், உப்பு, கடுகு, சீரகம், வெந்தயம், சோம்பு, மிளகு, மிளகாய், தனியா, புளி, உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு, பாசிப்பருப்பு, வறுகடலை, பெருங்காயத்தூள் ஆகிய பொருட்கள் அமுதம் பிளஸ் மளிகை தொகுப்பில் அடங்கியுள்ளன.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் 298 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை இன்று திறந்து வைத்த முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின ம், 366 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

நாமக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 146 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை எடுத்துரைத்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) --- 45 செகண்ட்*

[]<<<>>>[]

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் உள்ள கொத்திக்குட்டை ஏரியில் மூழ்கி உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் தீணயைப்புத்துறையினர் இணைந்து பருவமழை மற்றும் இயற்கை பேரிடரின்போது பொதுமக்கள் தங்களை தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் பங்கேற்ற பேரிடர் மீட்புப் படையினர் இது குறித்து தத்ரூபமாக செய்து காண்பித்ததுடன், செயல்முறை விளக்கமும் அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - லஷ்மணன் ) -45-- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ----43 செகண்ட்*

[]<<<>>>[]

மதுரை மாவட்டம் வலையங்குளத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் சிறுதானிய உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பிரச்சார வாகனத்தை ஆட்சியர் திரு பழனி இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலம் மற்றும் கோட்டூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு நேரடி சேர்க்கை நடைபெறுவதால் மாணவ மாணவியர் இம்மாதம் 30-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலிருந்து, ஆந்திர மாநிலம் திருப்பதிக்கு புதிய பேருந்து சேவை இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

[]<<<>>>[]

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்ட 331 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என ஆட்சியர் திருமதி சாந்தி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

சென்னை கோடம்பாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை மேயர் திருமதி பிரியா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

**Basel** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் ஆல்பனோ ஒலிவெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 3-6, 7-5, 10-8 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் **Jean Julien rojer -** இங்கிலாந்தின் **Joe Salisbury** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஜோஹர் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

மலேசியாவில் இப்போட்டி சற்று முன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

***End of News***